# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# முதல் பத்து

## இரண்டாம் திருமொழி - வாலி மாவலத்து
## திருப்பிரிதி

** வாலி மாவலத்து ஒருவனது உடல் கெட *
வரிசிலை வளைவித்து * அன்று
ஏலநாறு தண்தடம் பொழில் இடம் பெற *
இருந்த நல் இமயத்துள் **
ஆலி மாமுகில் அதிர் தர அருவரை *
அகடுற முகடேறி *
பீலி மாமயில் நடம் செயும் தடஞ்சுனைப் *
பிரிதி சென்றடை நெஞ்சே! 1

கலங்க மாக்கடல் அரிகுலம் பணி செய்ய *
அருவரை அணை கட்டி *
இலங்கை மாநகர் பொடி செய்த அடிகள் தாம் *
இருந்த நல் இமயத்து **
விலங்கல் போல்வன விறல் இருஞ்சினத்தன *
வேழங்கள் துயர் கூர *
பிலங்கொள் வாள் எயிற்று அரி அவை திரி தரு *
பிரிதி சென்றடை நெஞ்சே! 2

துடிகொள் நுண்ணிடைச் சுரிகுழல் *
துளங்கெயிற்று இளங்கொடி திறத்து * ஆயர்
இடிகொள் வெங்குரல் இனவிடை அடர்த்தவன் *
இருந்த நல் இமயத்து **
கடிகொள் வேங்கையின் நறுமலர் அமளியின் *
மணி அறை மிசை வேழம் *
பிடியினோடு வண்டு இசை சொலத் துயில் கொளும் *
பிரிதி சென்றடை நெஞ்சே! 3

மறங்கொள் ஆளரி உருவென வெருவர *
ஒருவனது அகல் மார்வம்
திறந்து * வானவர் மணிமுடி பணி தர *
இருந்த நல் இமயத்துள் **
இறங்கி ஏனங்கள் வளை மருப்பு இடந்திடக் *
கிடந்து அருகெரி வீசும் *
பிறங்கு மாமணி அருவியொடு இழிதரு *
பிரிதி சென்றடை நெஞ்சே! 4

கரைசெய் மாக்கடல் கிடந்தவன் *
கனைகழல் அமரர்கள் தொழுதேத்த *
அரைசெய் மேகலை அலர்மகள் அவளொடும் *
அமர்ந்த நல் இமயத்து **
வரைசெய் மாக்களிறு இளவெதிர் வளர் முளை *
அளைமிகு தேன் தோய்த்து *
பிரசவாரி தன் இளம்பிடிக்கு அருள் செயும் *
பிரிதி சென்றடை நெஞ்சே! 5

பணங்கள் ஆயிரம் உடைய நல் அரவணைப்
பள்ளி கொள் * பரமா! என்று *
இணங்கி வானவர் மணிமுடி பணி தர *
இருந்த நல் இமயத்து **
மணங்கொள் மாதவி நெடுங்கொடி விசும்புற *
நிமிர்ந்து அவை முகில் பற்றி *
பிணங்கு பூம்பொழில் நுழைந்து வண்டு இசை சொலும் *
பிரிதி சென்றடை நெஞ்சே! 6

கார் கொள் வேங்கைகள் கனவரை தழுவிய *
கறிவளர் கொடி துன்னி *
போர் கொள் வேங்கைகள் புனவரை தழுவிய *
பூம்பொழில் இமயத்துள் **
ஏர் கொள் பூஞ்சுனைத் தடம் படிந்து *
இனமலர் எட்டும் இட்டு இமையோர்கள் *
பேர்கள் ஆயிரம் பரவி நின்றடி தொழும் *
பிரிதி சென்றடை நெஞ்சே! 7

இரவு கூர்ந்து இருள் பெருகிய வரை முழை *
இரும்பசி அது கூர *
அரவம் ஆவிக்கும் அகம் பொழில் தழுவிய *
அருவரை இமயத்து **
பரமன் ஆதி எம் பனி முகில் வண்ணன் என்று *
எண்ணி நின்று இமையோர்கள் *
பிரமனோடு சென்று அடி தொழும் பெருந்தகை *
பிரிதி சென்றடை நெஞ்சே! 8

ஓதி ஆயிர நாமங்கள் உணர்ந்தவர்க்கு *
உறுதுயர் அடையாமல் *
ஏதம் இன்றி நின்று அருளும் நம் பெருந்தகை *
இருந்த நல் இமயத்து **
தாது மல்கிய பிண்டி விண்டு அலர்கின்ற *
தழல் புரை எழில் நோக்கி *
பேதை வண்டுகள் எரி என வெருவரு *
பிரிதி சென்றடை நெஞ்சே! 9

** கரிய மாமுகில் படலங்கள் கிடந்து *
அவை முழங்கிட * களிறென்று
பெரிய மாசுணம் வரை எனப் பெயர் தரு *
பிரிதி எம்பெருமானை **
வரிகொள் வண்டறை பைம்பொழில் மங்கையர் *
கலியனது ஒலி மாலை *
அரிய இன்னிசை பாடும் நல் அடியவர்க்கு *
அருவினை அடையாவே 10

**அடிவரவு:** வாலி கலங்க துடி மறம் கரைசெய் பணன்ங்கள் கார் இரவு ஓதி கரிய முற்ற

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**